9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-91, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1990-91 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28-3-2002 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1990-91 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை	(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு:	
2 - மாநில ஆயத் தீர்வைத் துறை	16,15,323
3 - மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்	4,47,508

கோரிக்கை	(ரூபாய்)
5 - முத்திரைத் தாள்கள்—நிருவாகம்	27,70,330
7 - மாநிலச் சட்டமன்றம்	8,28,899
14 - சிறைச்சாலைகள்	20,93,286
17 - கல்வி	1,26,15,38,219
23 - கூட்டுறவு	26,86,61,159
29 - தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்	38,89,714
30 - சமூக நலன்	7,25,41,583
31 - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்	1,25,66,380
37 - பொதுப் பணிகள்—கட்டடங்கள்	4,81,80,238
38 - பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும்	1,09,17,242
41 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,31,21,178
42 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	26,05,72,463
45 - காட்டுவளத் துறை	1,36,92,960
47 - செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்	14,02,398
மொத்தம் அ. வருவாய்க் கணக்கில் செலவு ..	**1,97,48,38,880**
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு:	
50 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	8,36,580
53 - பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு	19,54,942
54 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	2,42,24,989
55 - சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	15,50,801
மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	**2,85,67,312**
இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்:	
59 - மாநில அரசு வழங்கும் கடன்களும்—முன்பணங்களும்	68,95,43,025
பெருமொத்தம் ..	**2,69,29,49,217**